1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியின் (''கம்பனி'') 2024 யூன் 30 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 யூன் 30 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 யூன் 30 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமானம் மற்றும் செலவினம் ஒன்றுக்கு ஒன்று ஈடுசெய்து நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்க முடியாதிருந்த போதிலும் ஒரு வங்கிக் கணக்கின் மேலதிக பற்று மீதியான ரூபா 104,233,642 ஏனைய வங்கிக் கணக்கு மீதிகளுடன் ஈடுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். சேமிப்பு எதிர்வரும் கணக்காண்டின் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமானம் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று ஈடு செய்து நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமானம் மற்றும் செலவினம் ஒன்றுக்கு ஒன்று ஈடுசெய்து நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்க முடியாது.

(ஆ)	இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு ஆண்டு கால எல்லையை விஞ்சிய சகல பொறுப்புக்களும் நிதிநிலமைக் கூற்றில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் பல வருட காலத்தை விஞ்சிய ரூபா 21,629,467 ஆன கடன் கொடுத்தோர் மீதி நடைமுறைப் பொறுப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம். நிதி நிலமைக் கூற்றில் நடைமுறை பொறுப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 21,629,467 கடன் கொடுத்தோர் மீதி பல வருட காலத்தை விஞ்சிய மீதியாக இருந்தமையால் எதிர்காலத்தில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்று விடயங்கள் சமர்ப்பித்தல் மற்றும் வகைப்படுத்துதல் வேண்டும்.
(இ)	இலங்கைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி மற்றும் முதலீட்டு செயற்பாடுகளில் உருவாகியிருந்த காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் தனித்தனியாகக் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளில் இருந்து கிடைத்த காசு பாய்ச்சலில் நீண்ட கால மற்றும் குறுங்கால கடன் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் தேறிய மீதியான ரூபா 1,973,033,939 பெறுமதி ஒன்று இனங்காணப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம். காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளில் இருந்து உருவாகின்ற நீண்டகால மற்றும் குறுங்கால கடன் பெறுவனவுகள் மற்றும் செலுத்துதல்களின் தேறிய காசுப் பாய்ச்சல் அல்லாமல் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட கடன் பெறுமதியாக ரூபா 1,973,033,939 தொகை குறிப்பு இலக்கம் 26 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.	நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்று விடயங்களை சமர்ப்பித்தல் மற்றும் வகைப்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 112 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனிக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவிடுவதற்காக வெளித்தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு மற்றும் வெளித்தரப்பினரால் கம்பனிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். எதிர் வரும் கணக்காண்டின் போது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக்கூற்றின் பிரகாரம் கம்பனிக்கு காணப்படுகின்ற வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	காலப்பகுதிக்குரிய கட்டிடம், இயந்திர உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், கணனி உபகரணங்கள், ஆய்வு கூட உபகரணங்கள் போன்ற சொத்துக்களில் நடப்பாண்டு காலப்பகுதிக்குரிய பெறுமானத் தேய்வு முறையே ரூபா 12,295,373 தொகை, ரூபா 228,830 தொகை, ரூபா 1,494,531 தொகை, ரூபா 2,134,614 மற்றும் ரூபா 857,615 ஆக இருந்த போதிலும் முன்னைய ஆண்டின் பிழைகளை சரி செய்வதற்கு உரிய பெறுமதி	ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப் பகுதிக்குரிய பெறுமானத் தேய்வு சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.

	சீராக்கப்பட்ட பின் பெறுமதி இலாபம்/ நட்டம் கணக்கில் உள்ளடக்கியதன் காரணமாக காலப் பகுதியின் இலாபம் ரூபா 1,714,791 இனால் குறைமதிப்பீட்டு செய்யப்பட்டிருந்தது.		
(ஆ)	மீளாய்வாண்டு காலப்பகுதிக்கு உரியதாகக் கிடைக்க வேண்டிய திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் ரூபா 28,400,025 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 23,763,204 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக காலப் பகுதியின் இலாபம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 4,636,821 இனால் குறை மதிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப்பகுதிக்குரிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(இ)	நிலையான வைப்பின் அடிப்படையில் வட்டி வருமானம் கணிப்பிடல் பட்டோலையின் பிரகாரம் மீளாய்வாண்டு காலப்பகுதிக்குரிய நிலையான வைப்பின் அடிப்படையில் வட்டி வருமானம் ரூபா 92,034,223 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 83,089,542 ஆக குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக காலப்பகுதியின் இலாபம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 8,944,681 இனால் குறைமதிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப் பகுதிக்குரிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஈ)	2024 யூன் 30 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வட்டிக் கணக்கின் மீதியான ரூபா 166,919,973 திறைசேரி உண்டியல்களிக் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக திறைசேரி உண்டியல் அப்பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(உ)	கம்பனியின் கற்பனைச் சொத்துக்கள் 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையில் பெறுமானத் தேய்வு செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலில் கற்பனைச் சொத்துக்கள் பெறுமானத் தேய்வாக ரூபா 396,479 பெறுமதி ஒன்று வரிக்கு முன் இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப் பகுதிக்குரிய செலவினங்கள் மாத்திரம் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஊ)	முன்னைய ஆண்டின் கணக்கீட்டுத் தவறை சரி செய்வதற்காக சீராக்கப்பட்ட ரூபா 1,988,041 மீதி காசுப்பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன் இலாபத்தில் சீராக்கப்பட்டமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வருகின்ற காசு உட்பாய்ச்சல் அப்பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காசுப்பாய்ச்சல் கூற்றில் முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(எ)	காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலில் தொழிற்படு மூலதன மாற்றங்களை சீராக்கும் போது வைப்புக்கள் மற்றும் முற்பணக் கணக்கு	ஏற்றுக்கொள்ளவில்லை. வைப்புக்கள் மற்றும் முற்பணக் கணக்குகளில் வேறுபாடுகள் பிற்போட்ட	தொழிற்படு மூலதன மாற்றங்கள் சரியாக சீராக்கப்படல்

	மீதிகளின் வேறுபாடு ரூபா 285,252 குறைத்துக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் வருகின்ற காசு உட்பாய்ச்சல் அப்பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.	வரி வருமானத்தினால் ஏற்பட்டிருந்தது. அது சீராக்கப்பட்டமையால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது.	வேண்டும்.
(ஏ)	2024 ஏப்ரல், மே மற்றும் யூன் என்ற 03 மாத காலப்பகுதியில் கம்பனியின் நீண்ட காலக் கடனை தீர்த்து வைப்பதற்கு உரிய ரூபா 1,976,992,849 தவணைப்பணம் செலுத்துதல் குறுங்கால கடன் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்கள் அப் பெறுமானத்தால் குறை கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்ததுடன் நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்ளவில்லை. 2024 ஏப்ரல் 01 முதல் 2025 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்காக நீண்ட காலக் கடன் அளவு குறுங்கால கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. குறுங்காலக் கடன் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளமையால் இந்த ரூபா 1,976,992,849 தவணைப் பணம் செலுத்துதல் குறுங்கால கடன் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப்பெறுமானத்தால் நடைமுறைப் பொறுப்புக்கள் குறை கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்ததுடன் நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்படவில்லை.	பொறுப்புக்கள் சரியாக வகைப்படுத்தப்படல் வேண்டும்.
(ஐ)	சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியால் விற்பனை செய்யப்படுகின்ற தேயிலை கிலோ கிராம் 50 கலவை உர மூட்டை ஒன்றுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற ரூபா 2,000 பெறுமதி கம்பனியின் விற்பனையாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமல் விற்பனைக் கிரயம் கணிப்பிடும் போது உரமாணியமாக அதன் கீழ் குறைத்துக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக காலப் பகுதியின் விற்பனைப் பெறுமதி ரூபா 38,052,000 இனால் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்ளவில்லை. சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2024 பெப்ரவரி மாதம் கிலோகிராம் 50 மூட்டைக்கு ரூபா 2,000 வீதம் ரூபா 120 மில்லியன் மனியத் தொகை தேயிலைச் சபையின் மூலம் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. பட்டியல் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பட்டிடயல் மூலம்	காலப் பகுதிக்குரிய வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக இனங்காணப்படல் வேண்டும்.

விநியோகிக்கப்படுகின்ற உரத்திற்கு உரிய மூட்டைகளின் எண்ணிக்கைக்கு சமமான மானியப் பெறுமதி கணக்கு காலப் பகுதியின் இறுதியின் போது பெற வேண்டிய மானியக் கணக்கில் அகற்றப்படுகின்து. இதன் போது ரூபா 2,000 ஆன மானியத் தொகைக்குப் பதிலாக பட்டியல் விநியோகித்தல் மேற்கொள்ளப்படாமையால் விற்பனைக் கணக்கில் சீராக்கம் மேற்கொள்ளப்படுவ தில்லை. தேயிலைச் சபை ஊடாக மானியப் பணம் பெறும் போது VAT பட்டியல் விநியோகிக்கப்படாதிருந்தது டன் அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த மானியத் தொகை எங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் ஏனைய தேயிலை உரப் பெறுமதியின் மிகுதித் தொகை சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து பெறப்படுகின்றமையால் அதற்காக மாத்திரம் தனித்தனியாக VAT பட்டியல் விநியோகிக்கப்படுவதுடன் அது விற்பனையாகக் கணக்கீடு செய்யப்படுகின்றது. மானியத் தொகைக்காக VAT அறவிடப்படாமையால் விற்பனையாகக் குறிப்பிடப்படாமல் விற்பனைக் கிரயத்தில் இருந்து குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1.5.3 இணக்கம் செய்யப்பாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

விடயம்	நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி	நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி	வேறுபாடு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
	ரூபா	ரூபா	ரூபா		
வட்டி வருமானம்	120,901,686	130,446,238	9,544,552	ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப் பகுதிக்குரிய வருமானம் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
இழப்பீட்டுப் பணம்	1,009,100	805,910	203,190	இணங்கவில்லை. கட்டாய ஓய்வூதிய இழப்பீட்டு முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் சேவையில் இருந்து விலகிச் சென்ற ஓய்வூதியம் 863 என்ற உத்தியோகத்தர் சேவைக் காலம் 17 வருடங்கள் ஆகும். இதன் போது இழப்பீட்டுத் தொகை ரூபா 805,910 ஆக சேவைக் காலம் 11 வருடமாகக் கருதியே கணிப்பிடப்பட்டிருந்தது. எனினும் பின்னர் அவரின் சேவைக் காலம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அதற்குரியதாகக் கணிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,009,100 சரியான இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்ட மீதிக்கு நேரொத்த அறிக்கையுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும்.

1.5.4 அதிகாரப் பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரப் பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 மார்ச் 31 இல் உள்ளவாறு மக்கள் வங்கியில் இருந்து கிடைக்க வேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 848,248 புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டதுடன் அதற்குரிய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறவேண்டிய மீதிகளை புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கு தேவையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான உரத்திற்காக திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய மாணியம் ஆக 2018 ஆம் ஆண்டு முதல் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 62,181,400 தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படாமையினால் அந்த மீதியின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். இந்த பணத்தை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக விவசாய அமைச்சு மற்றும் தேசிய உர செயலகத்திற்கும் 2025 இன் கடப்பாடுகள், பொறுப்புக்கள் மூலம் கோரப்பட்டுள்ளது.	மீதிகளை உறுதிப்படுத்தி பெறப்படல் வேண்டும்.
(ஆ)	02 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையான கால வீச்சில் இருந்து அறவிடப்படாமல் காணப்படுகின்ற 224 கமநல சேவை நிலையங்களில் இருந்து கம்பனிக்கு அறவிட வேண்டிய கூட்டுப் பெறுமதி ரூபா 61,408,774 ஆன கடன் மீதி உரிய தரப்பினரால் கணக்காய்வுத் திகதி வரையிலும் உறுதிப்படுத்தப்பட வில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். இந்த நிதி அறிக்கை மும்மாத காலப் பகுதிக்கு சமர்ப்பிக்கப்பட்டமையால் எதிர்வரும் கணக்காண்டின் போது மீதியை உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மீதிகளை உறுதிப்படுத்தி அறவிடல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	உர விற்பனையின் அடிப்படையில் ஏற்பட்ட 03 வருடங்களை விட காலாவதியாகி இருந்த பல்வேறு தரப்பினரிடம் இருந்து அறவிட வேண்டிய கூட்டுப்பெறுமதி ரூபா 56,002,544 மற்றும் 10 வருடங்களை விஞ்சிய ரூபா 87,380,655 மீதி மீளாய்வாண்டு காலப் பகுதியின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். இந்த கரைசல் உரம் பகிர்ந்தளிப்பவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 42,952,277 தொகை தொடர்பான வழக்கின் பிரகாரம் ரூபா 60,000 தொகை வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் பகிர்ந்தளித்தல் முகவருக்கு மீண்டும் வழங்க வேண்டிய தொகையாக இருந்தமையால் மறை மீதியைக் காட்டியது. அந்தத் தொகையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அனுமதி பெற்ற வியாபார முகவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய 10 வருடம் மற்றும் 06 வருடங்களை விஞ்சிய கடன் மீதிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்ட போதும் உறுதிப்படுத்தல் கடிதம் கிடைத்தல் மிகவும் சிறிய அளவாகும். எனினும் அவ்வாறே ரூபா 347,119 தொகை பெற்ற தரப்பினரை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது. அதனால் பணிப்பாளர் சபைக்கு இந்த தகவல்கள் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்று மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதில் குறிப்பிடப்பட்ட அரச நிறுவனமாக	அறவிட வேண்டிய பணத்தை அறவிடல் வேண்டும்.

		மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் என்ற இரண்டு நிறுவனங்கள் தொடர்பாக அமைச்சு செயலாளருக்கு அறிவித்து நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ச்சியாகக் கடிதம் அனுப்பப்படுகின்றது. அம்பாறை பிரதி விவசாயப் பணிப்பாளரிடம் இருந்து அறவிட வேண்டிய பணம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே பெலவத்த சீனி கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய நிதி தொடர்பாகவும் தொடர்ச்சியாக அறவிடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அந்த நிறுவனத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே இப்பாகமுவ நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் இருந்து அறவிட வேண்டிய பணம் தொடர்பாகவும் 2025 இன் கடப்பாடுகள் பொறுப்புக்கள் கோரிக்கையிடும் போது குறிப்பிடப்பட்டுள்ளது.	
(ஆ)	களஞ்சிய உத்தியோகத்தரின் இருப்பு பற்றாக்குறையின் காரணமாக மேலும் அறவிட வேண்டிய மீதி ரூபா 7,933,189 கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். பொத்துவில் இருப்பு உத்தியோகத்தரின் பற்றாக் குறையான ரூபா 7,694,938.31 இற்காக கம்பஹா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதுடன் கட்டளையினைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஹுணுப்பிட்டி கட்டிட தொகுதியில் இருப்பு பற்றாக்குறையில் ரூபா 2,144,259 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மேலும் அறவிட முடியாது காணப்படுகின்ற ரூபா 238,251 தொகை தொடர்பாக அங்கீகாரத்தைப் பெற்று கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அறவிட வேண்டிய மீதிகளை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2017 ஆம் ஆண்டில் கம்பனியால் தனியார் கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட சேதனக் கரைசல் உரங்களுக்கு உரியதாக ஏற்பட்டிருந்த நட்டத்திற்காக அந்த கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 82,986,150 தொகை கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடுவதற்கு கம்பனி தவறியிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். இந்த பணத்தை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அறவிட வேண்டிய மீதியை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	2021 ஆம் ஆண்டின் போது யூரியா உர இருப்பு இறக்குமதிக்கு உரிய வங்கியினால் கம்பனியின் வங்கிக் கணக்கில் இருந்து அறவிடப்பட்ட ரூபா 3,258,480 கப்பல் காப்புறு ஒன்று பெற வேண்டியிருந்த பெறுமதி ஒன்றாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். இது கொவிட் தொற்று நோய் காலத்தில் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்களாக இருந்ததுடன் வங்கி உடன் கலந்துரையாடி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	பெறவேண்டிய மீதிகள் அறவிடப்படல் வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பிரதேச உரக் களஞ்சியத்தின் இருப்பு உத்தியோகத்தர் மற்றும் விற்பனை நிறைவேற்று உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மோசடிகளின் காரணமாக கம்பனியல் வழக்கு தொடரப்பட்டு 2014 ஆம் ஆண்டில் இருந்து அவ்வப்போது அறவிடப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 18,043,059 திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். பொதுத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு அதாவது பொதுத் திறைசேரியில் இருந்து பெறுவனவும் கிடைக்க வேண்டிய பெறுமதிகள் உள்ளமையால் அது தொடர்பாக கலந்துரையாடி மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும்.	அறவிடப்பட்ட பெறுமதியை பொதுத் திறைசேரிக்கு அனுப்புதல் வேண்டும்.
(ஆ)	உர மானியத் திட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்பட்ட (ரீ.எஸ்.பீ) உரம் மெற்றிக்தொன் 1,333 கம்பனிக்கு கையேற்பதற்கு உரியதாக திறைசேரிக்க அனுப்ப வேண்டிய ரூபா 83,000,000 மீளாய்வாண்டு காலப் பகுதியின் இறுதி வரையிலும் அனுப்பப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்ளவில்லை. உர மானியத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட ரீ.எஸ்.பீ உரம் மெற்றிக்தொன் 1,333 கம்பனிக்கு கையேற்பதற்கு பொதுத் திறைசேரிக்கு செலுத்தும் வகையில் ஒதுக்கப்பட்ட ரூபா 83 மில்லியன் தொகை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இதுவரை கையளிக்கும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.	மானியத் திட்டத்தின் கீழ் கம்பனி இருப்பில் உள்ளடக்கப்பட்ட உரப் பெறுமதி திறைசேரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
(இ)	2023 ஆம் ஆண்டு முதல் இந்தியக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்து கமநல சேவை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்பட்ட யூரியா உரத்திற்காக ரூபா 9,450,399 திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் இது தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளதுடன் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும்.	இந்தியக் கடன் உதவி உரத்திற்காக உரித்தான பெறுமதி திறைசேரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
(ஈ)	01 முதல் 07 வருடங்கள் வரையான காலத்தில் கம்பனிக்கு சேவை வழங்கிய	ஏற்றுக் கொள்கின்றோம். இதன் போது ஒவ்வொரு	செலுத்த வேண்டிய பெறுமதிகளை

ஒப்பந்தகாரர்களினால் உரித்து கோரப்படாத ரூபா 3,020,530 மீள செலுத்துகின்ற கேள்வி பிணை தொடர்பாக கண்டறிந்து உரித்து கோரப்படாது இருக்குமாயின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நீண்ட காலம் முதல் நடைமுறைப் பொறுப்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.	ஒப்பந்தகாரருக்கும் அறிவிக்கப்பட்டு மீதி உறுதிப்படுத்தல் பெறப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் வருமானத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உறுதிப்படுத்திய பின் உரித்துக் கோராது இருக்குமாயின் கம்பனியின் வருமானத்திற்கு இனங்காணப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டு காலப் பகுதியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 475,536,320 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மூன்று மாத காலப் பகுதிக்கான இலாபம் ரூபா 35,269,729 ஆகும். (கடந்த ஆண்டில் இலாபம்/4) அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 440,266,591 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கட்டாய ஓய்வூதிய இழப்பீட்டு முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் சேவையில் இருந்து விலகிச் சென்ற ஊழியர்களுக்காக செலுத்தப்பட்ட இழப்பீட்டுப் பணம் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
சுற்றாடலுக்கு சாதகமாக உள்ள உள்சாட்டு உரத்தைக் கொள்வனவு செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2021/2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட விற்பனை செய்யாமல் எஞ்சியிருந்த சேதன உரம் அம்பாறை, ஹொரவப்பொத்தானை, மதவாச்சி, நொச்சியாகம, பதுளை, மட்டக்களப்பு, தெஹிகஹலந்த, கோண்டாவில், ஹிங்குரக்கொட மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேசக் களஞ்சியங்களில் அதிகளவில் காணப்படுவதாக 2025 மார்ச் மாதத்தில் நடைபெற்ற வருடாந்த இருப்பு மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டது. 2025 மே 08 ஆந் திகதியில் இவ்வாறு விற்பனை செய்யப்படாமல் எஞ்சிக் காணப்படுகின்ற கூட்டுப்பசளையின் அளவு மெற்றிக்தொன் 2,487 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 32,835,355 ஆகும். எனினும் கணக்காய்வுத் திகதி வரையிலும் இந்த உரம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட குழு அறிக்கை தொடர்பாக விவசாய அமைச்சின் போது 2025.06.11 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டதுடன் அதன் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	கூட்டுப்பசளை அளவு தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து விளைவற்ற கிரயத்தை குறைத்தல் வேண்டும்.